உ

முருகன் துணை.

ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிரமாடிக்கம்பெனி,

மனமோகன ரஞ்சித எம். அரங்கசாமி நாயுடு,

ராவண-ஆர். கோவிந்தசாமி நாயுடு, பி. எஸ். ராமச்சந்திர பிள்ளை

பார்ஸி ஒரிஜினல் பாய்ஸ் டிரமாடிக் கம்பெனி,

கே. கே. சுப்பையா, கே. எஸ். கருப்பையா,

டி. ஆர். வெங்கடாஜலபதி, எ. எஸ். மங்களாம்பாள், ஏ. மீனாக்ஷி,

டி. ராஜாமணி, ஜானகி, பி. வேலுநாயகர், பைரவசுந்தரம் பிள்ளை

இவர்களாலும் பாடி நடித்துவரும்

கோவிலன்-கர்னகி,

முதற்பாகம்.

இஃது,

ஷெ கம்பெனிகட்கு உபாத்தியாயரும்,

ஸங்கீத ஸாகித்ய சந்த சரப மஹா வித்துவான்

வேலூர்

நாராயணசாமி பிள்ளை

அவர்களாலியற்றப்பட்டு,

த, துரைசாமி முதலியாரால்

சென்னை

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை] 1924. [அணா 4

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

"கோவிலன் கர்னகி சரித்திரம்" என்னும் புத்தகத்தை இரண்டு பாகமாக ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமாடிக்கம்பெனி உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, வித்துவான் வேலூர் நாராயணசாமிபிள்ளை அவர்களால் எழுதினதை, த. துரைசாமி முதலியாராகிய எமக்கு சகல சுசந்திரம் கொடுத்து விட்டபடியால், எமது அனுமதி யில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம் பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு

த. துரைசாமி முதலியார்,

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

உ

முருகன் துணை

ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமாடிக் கம்பெனி,
பார்ஸி ஒரிஜினல் பாய்ஸ் டிராமாடிக் கம்பெனி,
உபாத்தியாயர்-மஹா வித்துவான்

வேலூர்-நாராயணசாமி பிள்ளையின்

கோவிலன் கர்ணகி.

விநாயகர் வணக்கம்.

காப்பு வெண்பா.

ஞாலமெல் லாம்புகழும் நற்கோவி லன்சரிதை
சீலமெய் நாடகமாய் செப்பினேன்—மேலாய்
நிஜரூப மாய்க்காட்சி நீதருவாய் தேவா
கஜமுகா கூப்பினேன் கை.

1-வது சீன் மாளிகை.

(மாச்சோட்டான் செட்டியாரும், மாநு
கன் செட்டியாரும் வருகின்றார்கள்.

செட்டிமார்கள் தரு.

கல்யாரேதும் ஆஸ்மாடகலீ
சலே கலே யாமுஹய் (சல)
ஜார பாலம்கே மஸ்கரி காலும்கே மஸ்கரி
காநுப ஜாநு பரி ஹோ மஸ்கரி
காநுப ஜாநு பரி
அச்சாரே தில தாரகமாரா
சலே கலே யாமுஹய் (சல்)
சலோ லடக்கோ சலோ சிடக்கோ
சரே டுப் டேல் சேமோ
டுமக டுமக சல் சலே கலே [illegible] (சல்)

மாச்சோட்டான்:—ஓய் மானுகரே இப்படி வாரும் ஆகியில் நாம் செய்துக்கொண்ட பிரதிக்ஞைப்படி வைகையில் மிதந்து வந்த பெட்டிக்குள்ளிருந்த பெண்ணை நீரெடுத்து வளர்த்து வருகின்றீரல்லவா? அந்தப்பெண்ணை இப்போது என் குமாரனுக்கு மணம்புரிவிக்க வேண்டுமே என்னதடை இதற்கு.

மானுகர்:—உமது மனோபீஷ்டப்படியே செய்யலாம் நான் மாறுவேனோ! சந்தோஷமாய் செய்துக்கொள்ளுங்கள் இதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டு மல்லவா?

மாச்:—ஆம் என்ன ஏற்பாடு செய்யவேண்டியது ஓர் சுபதினம் நிச்சயித்து நம்முடைய பந்துவர்க்கங்கட்குத் தெரிவித்து மணம் புரிவிப்போம் அதுதான் வேறென்ன யிருக்கிறது.

மானுகர்:—இருக்கின்றதுயாதெனில், விவாகமாகினதும் நம் பந்து ஜெனங்களும் மித்திரர்களும் களிப்பதற்காக ஏதோ ஒரு ஆடல் பாடல் வைத்தால் நலமென்று என் மனதிற்குப் புலப்படுகின்றது.

மாச்:—ஆம் எனக்கும் சம்மதந்தான், என்ன ஆடல் பாடல் வைப்பதோ! நீரே தெரியுமே. அப்படியே செய்யலாம் அதற்கென்ன.

மானுகர்:—நீரே யோசித்துச் சொல்லும்.

மாச்:—தாசியைக்கொண்டு சதுர்க்கச்சேரி நடத்தினுல் நலம்.

மானுகர்:—ஆம் அதுவே சரியான யோசனை இந்தவூரில் சங்கீதர் தெரிந்த தாசிகளில்லையே அதற்கெப்படி.

மாச்:—இந்தவூரில்இல்லாவிட்டாலென்ன திருக்கடையூரில் மாதவி யென்னப்பட்ட தாசி ஒருவளிருக்கின்ருளாம் அங்கு சென்று முடித்தலே நன்மை.

மானுகர்:—ஆம் அப்படியே செய்யலாம் அதிருக்கட்டும். மணம் புரிவதற்கு சுபதினம் பார்க்கவேண்டுமே.

மாச்:—ஆம் முந்தியே பார்த்துக்கொண்டுதான் உம்மோடு வார்த்தையாடினேன்.

மானு:—ஓஹோ! எப்போது எந்தமாதம் எந்த தேதி எந்ததினம்.

மாச்:—இந்தமாதமே ஐந்தாந்தேதி சுக்கிரவாரம் காலை 5-மணிக்கு மேல் ... ர்ளாக கன்னியா லக்கினத்தில்,

மாஹுகர்:—ஓஹோ அப்படியா மெத்த சந்தோஷம் சிக்கிரம் நம் பந்து மித்திரர்கட்குத் தெரிவிரீம் மணவோலையனுப்பும், மற்ற வேண்டியவர்களைப்பற்றி நான் செய்துவிடுகிறேன்.
(போகிறார்கள்)

---

2 வது சீன் கல்யாண மண்டபம்.

மாஹுகர்:—வாருங்கள் வாருங்கள் அனைவரும் இங்கு உட்காருங்கள் எங்கே தாசியைககாணோமே.

(நட்டுவன் வணங்குதல்.)

ஓய் நட்டுவனாரே எங்கே தாசி! சீக்கிரம் அழைத்துவந்து சதுர் நடத்து ஆகட்டும்.

மாச்:—மாஹுகரே மணமாலை சூட்டியாயிற்று, மாங்கல்யமும் கட்டியாயிற்றல்லவா! இனி தாசி வரப்போகும் சமயம் ஆனதால் இந்த மணமகன் மணகளை அந்தப்புரத்திலழைததுக் கொண்டுபோகட்டும், ஏன் அப்படி சொன்னேனை தெரிய வருமா லககினத்தின் தன்மையால், அவ்விதம் கூறினேன்

மாஹுகர்:—ஆம்! ஆம்! தெரிந்துகொண்டேன் அப்படியே செய்கிறேன் பெண்மணி இவர்களை அந்தபுறத்திற்குக் கொண்டு போ! அங்கிருக்கட்டும் பிறகு விஷயம் தெரிவிக்கிறேன்

கர்னகியையும் கோவிலனையும் அந்தப்புறம் சேர்ப்பித்ததும் தாசியாகிய மாதகி வருகிறாள்)

மாதகி தரு.

சாண்டோ சாண்டோஜி மோரி கலையாம்
கிகாவோ நஹீ பையாம்
படுமே தோரி பையாம் (சாண்)

ஆப்பு மேஜியா
மோரி லப்கர தரியாம்
தேகோ குஸன போலே ஸ்பையாம்
நஹி படும் தோரே பையாம்
ஏஹியாம் (சாண்)

மாதகி:—நமஸ்கரிக்கின்றேன் செட்டிமார்களே.

செட்டி:—ஹே! பெண்மணி இனி நீ தாமதிக்காமல் உன் சதுர்க்கச சேரியை நடத்து அதற்காக எவ்வளவுபொன் கேட்கின்றாய்.

மாதகி:—ஐயா செட்டிமார்களே எனக்கு பொன்னும் வேண்டாம் பொருளும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் ஆனாலொன்று நான் கேட்பதற்கு சம்மதப்படுவீர்களாகில் தெரிவிக்கிறேன்

செட்டி:—சந்தோஷமாக தெரிவி விடை கொடுக்கின்றோம்.

மாதகி:—சந்தோஷம் ஒருக்கால் பின்னிடைவீராகில் நான் சதுர் நடத்தமாட்டேன் மீண்டும் என் நகர்க்கே சென்றுவிடுவேன் இதற்கு சம்மதம் தானே.

செட்டி:—ஆம்! தாராளமாகச் சொல் தாமதப்படாதே! சீக்கிரமாகத் தெரிவி! காலஹரணம் செய்யாதே! விபரமாகத் தெரிவி.

மாதகி:—தெரிவிக்கின்றேன் பித்புக்களே! அதாவது யாசிதனில், நான் தாஙகள் புகன்றபடி சதுர் செய்வேனாகில் என்னுடன் பிறந்த.

மாதகி தரு.

இஸ்வாஸ்தே கீதமூஜே என்றமெட்டு.

இந்தமாலையைக் கழற்றி ஆகாயத்தி
 லெறிவேன துயார் கழுத்தினிலே
அந்தக்ஷணம் விழுந்தால்
அவரை கைகொண்டுநான்
 ஆளனுய்ப்பற்றுவேன் சபைதனிலே
அதற்கு சம்மதமோ சொல்வீர்
சதுராடு மென்கிட்டவே வாரீர்
இதையாலோசித்துவிடை தர்சீர்
பதில் தாராவிடிற் சொல்வேன் பாரீர்
மிகு பாக்ய வான் களே
நல் வாக்குரைப்பீர் நீங்களே
 வந்வனம் வந்தனம் தந்தேன்மாதகி இனி
 தந்திடுவீர் தாம்பூலமேசெட்டிமார்களே
 செட்டிமார்களேகெட்டி சொல்வீர்களே இனி
 தந்திடுவீர் தாம்பூலமேசெட்டிமார்களே (இந்த

மாதகி:—ஏன் பிரபுக்களே இதற்குசம்மதந்தானே? ஆனல் இதோ நடிக்கின்றேன் வந்தனம்.

செட்டி:—உன் இஷ்டப்படிக்கே சம்மதித்தோம் சீக்கிரம் சதுர் நடத்து! தாமதியாதே! ஆகட்டும் சீக்கிரம்.

மோடிசெய்யாமலெந்தன் மோகம் தீராய் சுந்திரா
மொழிந்தேன் மொழிந்தேன் மோடியேனோமாரா மோ
கோடிசந்திரரூப மேனியனே உன்னை
கும்பிட்டே னெந்தனைக் கூடாதிருப்பதேனோ
கொள்கைக்கு நலந்தானோ கொழுனனே வினையேனோ
கோபமெங்கள் மீதாமோ குமாரயிந்த அடமேனோ
நங்கைமனம்விம்மிவிம்மி நாடுதிதோ நல்லாகவே
நல்லவன்போ லல்லல்செயய
வில்லேந்துரான் விரைவாய்தாவி
மோடி யேனோ மாரா மோ

செட்டி:—ஆஹா! பலே பேஷ்! மெத்தவும் சந்தோஷம் நேயர்களே பார்த்தீர்களா இதுபோல் பார்த்திருக்கிறோமா பேஷ்! பேஷ்! மிக்க ஆனந்தமேயாகியது ஆஹா! ஆஹா! சபாஷ்! ஏ! பெண்பவளி போதும் போதும் நிறுத்து! எங்கள் மனமெல்லாம் மிக்க பரவசமேயடைந்தது போதும்.

கண்டேன்ஜனந்தங் சொண்டேன் என்ற மெட்டு.

தான்க்யு மைடியர் ஸர்ஸ்
டோன்ட்லீவ்மி எவரண்டெவர்
வான்ட்டிங் நவ் யுவர் பவர்

ஸென்ஸிபில் ஹாண்ட்ஸம் ஜெண்ட்ரீஸ்
ஸேவ்மி ப்ளீஸ் எனி மோமெண்ட்
ஜெண்டில் நாராயண சாமி டியர்
கிவ்மி பேவர் ஐயின்னோஸெண்ட் (தா)

மாதகி:—ஐயா பிரபுக்களே? நான் தங்களிடம் தெரிவித்தபடியே இதோ என் பொன்னுருவிமாலையைக் கழற்றி எறியப்போகிறேன் இதோபாருங்கள்.

செட்டி:—சந்தோஷம் உன் இஷ்டபடியே செய்.

ஷா ஹேவாலே தாப்யாரா என்ற மெட்டு.

என்னுடன் பிறந்த மாலையே எனக்
கேற்வரிடம்போ மாலையே

சொன்ன மொழிபோல்செய் மாலையே
சுழன்றேதான கழுத்தின்மேல்
பழுதின்றி விழுவாயே (என்)
எனக்கேற்ற நாயகனை நாடி
எங்கிருந்தாலுமே நீ தேடி
மனதிற்கிசைந்தோரிட மோடி
மாலையேநீ சீலமுடன்
மேவிருப்பாய் பாவிகையே
மகிழவே மணமது புரிகுவே னிது நிஜம் !
சுகமுடனணைகுவேன் இது சகஜம் (என்)

மாதகி:—ஹே! மாலையே! நீ சீக்கிரமாகத்தானே சென்று எனக் கேற்ற நாயகன் எங்கிருக்கின்றாரோ அன்னவரைத் தேடி, கண்டுபிடித்து, அன்னவருடைய கழுத்தில்போய் விழு! போ தாமதியாதே! சீக்கிரம் செல்.

(பொன்னுருவி மாலையை எறிகிறாள் மாலை, ஆகாய மார்க்கமாகக் கிளம்பி சுழன்று கொண்டே வருகிறது)

செட்டி:—ஆஹா என்ன ஆச்சரியம், நம் கழுத்தில் விழாமல் அந் தரங்கமாகச் சுழல்கின்றதே, ஆஹா பேஷ் வாருங்கள்.

(எல்லோரும் போகிறார்கள்.)

மாதகி:—நாம் விடுத்தமாலை எங்குபோனதோ தெரியவில்லைநாமுந் தேடிச்சென்று பார்ப்போம்.

(மாதகி தேடிச்செல்கிறாள்: கோவிலன் வருகிறான்.)

ரோட்

கோவிலன்:—இதென்ன யாருமில்லையே! சதுர்கச்சேரி யென்றார் களே! என்னயிது ஒன்றையுங்காணேமே! சரி இங்கிருக்க லாம் இனிமீது நடத்துவார்கள் பால் தோன்றுகின்றது.

(மாதகி வருகிறாள், பொன்னுருவிமாலை அந்தரமாய் சுழன்றுகொண்டே கோவி லன் கழுத்தில் விழுகிறது.)

மாதகி :—நாம் விடுத்தமாலே யார்கழுத்தில் விழுந்ததோ தெரிய வில்லையே ! இந்த மாளிகையிலும் பார்ப்போம். ஆஹா பேஷ்!

தரு.

ப்யாரஸேபத என்ற மெட்டு.

இதோ என் மாலையும்
இருக்குதே இவர்கழுத்தில்
இருக்குதே இவர்கழுத்தில்
இருக்குதே இவர்கழுத்தில் (இ)

நமக்கேற்ற புருடனை
நாட்டினில் தேடி
அமர்ந்ததே நான்களிக்க லேடி
சமரில்லாநாதனை தழுவுவேன் கூடி
குமரிக் குகந்த சுந்தர
கோதையெனக் கிவரே ஜோடி (இ)

மாதகி :—பேஷ் ! ஆஹா என்ன அழகு, என்ன சிங்காரம், என்ன கெம்பீரம், ஆஹா ஹா இவரைக் கண்டபோதே நம் எண்ணமும் ஒருவாருக மாரிவிட்டதே ஆஹா ஹா ஹா,

தரு.

அவதார புருஷன் என்ற மெட்டு.

நமக்கேற்ற புருஷன்
என்ன அழகாய்
என்ன ஒழுங்காய் அமர்ந்திருக்கிருர் (நமக்)

அமர குபேரனே
அங்கஜ மாரனே
அரனே அயனே ஜெயசூரனே
உரகபூஷண கெம்பீரனே
ஒய்யாரனே (நமக்)

என்ன சிங்காரம் என்னகெம்பீரம்
மன்னனமர்ந்திருக்கும் தீரம்
கன்னல்மாரன்போ லாரவாரம்
விஸ்தாரம் (நமக்)

மாதகி:—நாம் இப்படியே வர்னித்துக் கொண்டிருந்தால் யாது பயன்; நாம் விடுத்தமாலே அவர்கழுத்தில் விழுந்து விட்டது இதை அவர் அறிந்திலேபோலும், நல்லது நாம் அருகிற் சென்று அழைப்போம்.

தரு.

ஆரேசையான் என்ற மெட்டு.

வாடாசாமி மதிவதன ராஜா
நாடா முத்தமேகுல ரோஜா (வா)
மோடியுமேனேடா மோகனங்கா
ஜாடுதே தென்றலும் சரசாங்கா
சகியேனடா சாமி
மகிழ்வோம் வாடா நேமி
புகழ்நாராயண சாமி
சுகிப்போம் நாமிப் பூமி
சுரமது புரிவோமிது
தருணமேநீ மருவிடுவாய் இனி (வா)

மாதகி :—துரையே வாரும் என் மிரள மிரள விழிக்கின்றீரே என்ன காரணம் நான் தான் உமது ஆசைக்காதலி ஒன்றும் யோசியாதீர், யாரோவென்று திகைக்காதீர்வாருமே இப்படி.

கோவி :—ஆஹா இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே இவள் யாரோ தெரியவில்லையே.

மாதகி தரு.

மஞ்சுளிகர் என்ற மெட்டு.

என்னயோசிக்கின்றீர் நீருமே
என்னைப்பாருமே துன்பந் தீருமே
மன்னவா இப்படி வாருமே

கோவிலன் தரு.

என்கைப்பற்றி யிழுக்கும் நீயார்
பன்னிடுவாயுந்தனூர் பேர்

மாதகி தரு.

உன்காதலிநானேதான் நாதர்
என்பிரக்கியாதா பொன்மலர்ப் பாதா
தென்புடன் கூடலாம்வா நீதா

கோவிலன் தரு.

சீ துன்மார்க்கிசெட் தூரமில்லடி
என்கைப்பற்றுதே நாரி செல்லடி

மாதகி தரு.

கன்னல்மாரா கட்டழகி நானே
காதலிகோனே காமியா னேனே
உன்னதமாய் சுபந்தரு வேனே

கோவிலன்தரு.

சீ சென்றுவிட்டி சீசீ நாரி
நின்று கத்தாதே சீசீ காட்டேரி

மாதகி தரு.

அன்பாவாராய் என்னைக் கூடவே

கோவிலன் தரு.

ஒன்றும் பேசாதே
நின்று வீசாதே.

மாதகி தரு.

உன்னைவிட்டு போகேனிது சத்யம்

கோவிலன்:—துராத்மா! எட்டிநில். விடுஎன் கரத்தை.

தரு.

காதலி வந்திடுவாய் என்ற மெட்டு.

ஏந்திழையாளே நீயார்
எந்தவூர் என்னபேர்
இன்று கூர் கூர் கூர் (ஏ)
எனதிடகரமதை பிடித்துமே இழுக்கும்நாரி
உனதிடமமதையை யடக்கியே யழிப்பேன்சிறி
சினமதுபெருகிட புரியாதே சீ பழிக்காரி
இனி எவரறிந்திடாமுனம் நட சீகாட்டேரி

மாதகி தரு.

என்மாலையைத் தாருமே
இன்றேல் சேர்ந்திடப் பாருமே
மன்னுமோகத்தைத் தீருமே
கன்னல் மாரா சேர வாருமே

கோவிலன் தரு.

காதகியே சண்டாளி போ போ போடி

மாதகி தரு.

ஆதரிப்பீர்காதலனே நாமே ஜோடி

கோவிலன் தரு.

ஏந்திழையாளே நீயார் (ஏந்)

மாதகி:—துரையே! அப்படி கேளுங்களேன்! நான் உமது காதலி தான்! வேறு நினையாதீர்! சந்தேகமுருதீர்! இப்படி வாரும்.

கோவிலன்:—ஆஹா! இவள் யார்! இதென்ன! இப்படி பல வந்தனம் புரிகிருளே! நாமினி இங்கிருக்கொண்ணது.

(கோவிலன் ஓடுதல்)

மாதகி தரு.

ஓடாதே நீ நில்லு இனி
உனக்கேனே இந்த மல்லு எனைக்
கூடி எங்காகினுஞ் செல்லு நான்
கொண்டதற்கு பதில் சொல்லு

கோவிலன் தரு.

சொல்லுவதென்னடி போடி எனைத்
தொடவேண்டாம் நீர் மூடி எட்டி
நில்லுநில்லு குடி கேடி இனி
நெருங்கினல் உதைப்பேன் ஜாடி

மாதகி தரு.

ஒரு முத்தமாகிலும் தாடா இதோ
ஓடிப்போரேன் கிட்ட வாடா சற்
குருநாராயணசாமி சீடா என்
குறையை தீர்த்துவிட்டுப் போடா

கோவிலன் தரு.

கிட்டவாராதடி வேசி மிகக்
கேவலமாகின தாசி எனைத்
தொட்டிடாதடி சீ சீ
தாரநில்லடி தோஷி (கி)

மாதகி:—துரையே! நீர் எப்படி எப்படி என்னை தூஷித்த போதிலும் சரி! நானே உம்மைவிட்டு போகிறதில்லை இது சத்யம்.

கோவிலன்:—அடி நாரி! உனக்கு சத்யம் பால்சோறுதான், இனி வாதுபுரியாதே! பேசாமற் சென்று விடு.

மாதகி:—எப்படிபோவது மனந்தாளவில்லையே ஆ காதலா

தரு.

மஜதே தேதும் என்றமெட்டு.

அடாவாடா என் சாமி எந்தன்
ஆசைதீர்த்திடுங் காமி உம்மை
விடேனுனையறியப் பூமி எனை
விரட்டிடாதேசுக நேமி

கோவிலன் தரு.

அடிநானுனையறிவேன் போடி நீ
அதிகமாய்ப்பேசாதே மூடி சீ சீ
நடநட இனிகுடி கேடி வெறி
நாயே சீசீ வாயாடி

மாதகி தரு.

இப்படி யெந்தனை திட்டி நீர்
ஏசலாமோ யதட்டி உம்
கைப்பிடி நான்விடேன் கெட்டி என்
காதல்தீர் கற்கண்டு கட்டி

கோவிலன் தரு.

இந்த தளுக்கை யறிவேனே சீ சீ
என்கையைவிடு நீ தானே அடி
மந்தமதியுடைய மானே போ போ
வாதிடாதே செழுந் தேனே

மாதகி தரு.

நாயகா இதுவும் நலமா இந்த
நங்கையால் புத்தி சபலமா உம்
சேயிழைமேல் சஞ் சலமா நீர்
செப்புமுமக்குங் கேவலமா

கோவிலன் தரு.

பாதகிபேசாதே நாயே படு
பாவி செல்வாயடி பேயே ஆ ஹா
சாதக வார்த்தைகள் நீயே சொல்லி
கைகளைப் பிடிக் கிறாயே

மாதகி:—ஆம் என் துரையாதலால் கையைப்பிடித்தேன்! அதற்கென்ன, பிறரைப் பிடிப்பேனு! என் துரையே! இப்படி தூஷிக்கின்றீரே! இது தர்மமா என்மீது வர்மமா! காதலா இப்படி வாருமே! ஒரு முத்தமாகிலும் தாருமே! இல்லையேல் நான் படுங்கோரத்தையேனுந் தீருமே! கண்ணாளா.

கோவிலன்:—சீ சண்டாளி! மறுமுறை அப்படி தெரிவிக்காதே! அடிபாவி! என்னை இப்படி நிர்பந்தம் புரிவது ஞாயமல்ல உனக்கு? நான் கல்யாணகோலத்துடனிருக்கிறேனே, நீ இவ்வாறு வலியவந்து, கரம் பற்றுகிருயே, உனக்கு தர்மமா! ஹே! பெண்பாவாய் சென்றுவிடு! வீணில் ரோதனம் புரியாதே!

மாதகி:—பிராணகாதலா! இதென்ன இப்படி தெரிவிக்கின்றீரே. வீணில் என்னை வருந்தச்செய்வது நீதியா?

கோவிலன்:—சட் பேசாதே! நீயார் என்னை இப்படி நிர்ப்பந்திக்கின்ருயே?

மாதகி; அப்படி கேளுமே துரையே! இப்போது சந்தோஷமாயிற்று என் மனம்! நான்யாரெனில்

கோவிலன்:—சீக்கிரம் தெரிவிப்பாய், வளர்த்தாதே.

மாககி:—இதென்ன நாயகா இப்படி கோபிக்கின்றீரே! இவ்வளவு அவசரமா! ஆத்திரப்படாதீர்! தெரிவிக்கிறேன்? கேளும் நானே உமது விவாகத்திற்கு சதுராடவந்த தாசியாகும்; மற்ற தாதிகளைப்போல் கேவலமான தாசியென்று நினைத்துக் கொள்ளாதீர்; என் துரையே! இப்போதாவது சந்தேகந் தீர்ந்ததா நாயகா வாரும்!

கோவிலன்:—சட் பேசாதே! ஆஹா தாசியா நீ! இப்போது நன்கு தெரிந்துகொண்டேன் ஆனல், உன்னைப்போன்ற தாசிகளின் நடவடிக்கையைத் தெரிவிக்கிறேன் கேள்.

தரு.

திருவொற்றி லகுகங்கை என்ற மெட்டு.

நாசகாலியராம் தாசிகளை நம்பி
மோசம் போனர் பலபேர் இனி
பேசியும் பயனில்லை பார் மிக்க
பாசமுள்ளவர்போ லாசைகாட்டி ரொம்ப
காசைபறித் திடுவார் (நா)
அப்பேர்ப்பட்டவரை சொர்பனத்திலும்
நினைப்பதாற் பய மாகுதே அதை
செப்பினலும் வேகுதே அந்தத்
தப்பிலிமாதரை இப்போதும் நினைந்திட்டால்
அப்பப்பா உளம் நோகுதே (அப்)
கைப்பிடிநாயகன் சப்ரமஞ்சத்தின்மேல்
ஒப்பியுறங்கும் போது கையை
யப்புறந்தள்ளி மாது உடனே

துப்பிலகனேடாடி எப்போதும்போல் தூங்கும்
மைப்படிமார் தகாது (கை)

பேரானந்தமான ஆருவமுதத்தை
சீராய் துதித்தாற் புண்யம் அதனல்
பாரோர் வைப்பார் காருண்யம் குரு
நாராயணசாமி பாராயணம்பாடி
நேராயூர் சென்றால் கண்யம்

மாதகி:—தாமிப்படிக் கெல்லாம் பேசுவதில் எனக்கு சிலாக்கிய மேதான்! என் ஆசைக்காதலர் பேசினல் சந்தோஷமேதான்.

சோ:—சீ சண்டாளி! நாசக்காலி! சென்றுவிடு முன் நில்லாதே.

மாதகி தரு.

ஆ இவனுரோ என்ற வர்னமெட்டு.

ஏப்படி எப்படி சேசிலும் சரி
எந்தனைச் சேர்ந்தால் போதும்

கோவிலன் தரு

இப்படியாய்ப் பேசி ஏசியே வாதாடி
ஏய்த்தாலும் ஏமாறேன்
தீயத்திடுவேனே நான் இப்படி

மாதகி தரு.

மானுங் கலை போலநானும் நீரும் ஆடி
தானே மகிழ்வோம் சாமி
கானக் குயிலாலே நாண மாகுதடா
கோனே கோரும் சாமி எப்படி

கோவிலன் தரு.

ஏனடி இந்தப் பிடிவாதம் எனைவிடடி நாசகாலி
எட்டிநட பட்டிமாதே
கிட்டிடாதே தொட்டிடாதே இப்படி

மாதகி :—துரையே! என்னை இப்படி வருத்தப்படுத்தாதீர் இதனல் என்ன பயன் இப்படியும் என்னை சோதிககலாகுமா! வீணய் தூஷிக்கின்றீரே, அவ்வளவு கோபமேன்! என்வஸ்துவைத் தந்து விடுமே! ஓடிப்போகிறேன்? ஏதோ தாரும் இப்படி?

கோவிலன் :—என்னது இது எந்நேரமட்டும் வா வா வென்று அழைத்தனை? இப்போது வஸ்துவைத்தா என்கிறுயே!

மாதகி :—என்ன துரையே! அப்படிக்கு மொழிகின்றீரே! நேருக்கு நேராக யிருக்கும்போதே கவனியாமல் இப்படி தெரிவிக்கிறீரே! என்ன நாயகா.

கோவிலன் :—என்னடி மறுமடியும் கேட்கிருயே என்னிட மேது உன்னுடைய வஸ்து? சட்! போ! பேசாதே!

மாதகி தரு.

மாரனே எந்தனிட பொன் மாலையை நீதா

கோவிலன் தரு.

மங்கையே உந்தன் பொன்மாலே எங்கிருக்குது

மாதகி தரு.

அங்கஜா அதோ கழுத்தில் அமர்ந்திருக்குதே பாரும்

கோவிலன் தரு.

எங்கே யொன்றும் காணேமடி ஏதடி போடி

மாதகி தரு.

இப்படி நீர்சொல்லி விட்டால் எப்படி போவேன் சாமி

கோவிலன் தரு.

எப்படி யாணலும் போடி

மாதகி தரு.

கைப்பிடி விடேன்

கோவிலன் :—சட் சண்டாளி! கையை விடு.

மாதகி :—துரையே! என்னுடைய மாலே உமது கழுத்திலிருக்கிறதே! அதை நேரிற் கண்டும், இப்படி வாதிக்கின்றீரே! இது தர்மமா! அப்படி கொடுக்க இஷ்டமில்லாவிட்டால், ஒரு முத்தமாகிலும் தாரும்.

கோ :—சட் வாயாடாதே! எங்கே உன்மாலே? என்னிட மில்லேயே.

மாதகி :—அதோ பாரும் உமது கழுத்தில்.

கோவிலன் தரு.

சும் சும் சும் என்ற மெட்டு.

ஆஹா இதென்ன அதிசயம் இந்தமாலே
அறிகிலேன் கழுத்தினி லிருக்கிறதே
ஆரறியாமல் கழுத்தில்
அமர்ந்த தென்னமோ
சிரது குலேய நான் சிகறைப் பின்னமோ

பாரினி லிவள் மகாஜாலி ஆஹா
காரிழை இவள் படுநீலி ஓஹோ ஆஹா

கோ:—அடிவஞ்சகி! இப்போர்ப்பட்ட மந்திர தந்திரமுந் தெரியுமா உனக்கு! நல்லது.

கோவிலன் தரு.

மாமயிலே சேரவா என்ற மெட்டு.

இந்தமாலே யென்கழுத்தில் எவ்வாறிட்டாய்
எவ்வாறிட்டாய் எவ்வாறிட்டாய்.

மாதகி தரு.

எந்தன்சொல்போ லிந்தமாலே விழுந்தது நாதா எங்

கோ:—விந்தையே யானறியா தெப்படி வந்ததோ
மாதகி:— வந்த விதம் கூறுவேன்
கோ:— முந்தி சொல்லு நீயே தான்
மாதகி:— சுந்தரா என் கிட்டவா
கோ— மந்த மதி யாளே போ
மாதகி:— வாடா வா
கோ:—போடி போடி போ
மாதகி:— வா டு ரேன்
கோ:— பே சா தே (இ)

மாதகி:—துரையே கோபியாதீர்! சபையோர்களிடம் நான் தெரிவித்த படிக்கே என்னுடன்பிறந்த மாலேயைத்தான் நான் எறிந்தேன் அது உமது கழுத்தில் விழுந்தது. நான் என் செய்வேன் அப்படி விழுந்தால் எனக்கு நீர் நாயகனுகி விட்டீர் வீணில் வாதம் புரியாதீர் துரையே!

கோ:—சீ சண்டாளி! ஆஹா! இதற்கென்ன செய்வேன்! ஐயோ! இதென்ன இந்தமாலே அதிகபாரமாக இருக்கின்றதே! இதென்ன இவ்வாறு அமிழ்த்துகின்றதே என்ன செய்வேன்? கழற்றவும் முடிய வில்லேயே? ஆச்சரியமாயிருக்கிறதே காரணம் யாதும் தெரிய வில்லேயே.

மாதகி:—சீக்கிரமாகக் கழற்றித் தாரும் நான் செல்லுகிறேன்.

கோ:—ஆஹா! என்ன ஆச்சர்யமா யிருக்கின்றது ஆ ஜெகதீஸா

தரு ஜப்தகலந்திரு என்ற மெட்டு.

கழ்ற்ற முடியவில்லே கன்னியே என்செய்வேன்
கபடம் யாதே அறியேனேனன்

கத்தி ரம்பங்கோடரி கைவாள் கூர்மழுங்கிடுதே
காரணம் யாதொன்றும் தெரிகிலேன்
கருத்துங் குலேந்திடுதே கவலேமீறுதே
காதகியால் மனமும் சோருதே
கொடும் பாதகி சண்டாளியாலே மனமுமாறுதே
இனி தீதாகுமே எதுசெய்வேன் மாதரசியே

கோ :—ஐயோ, என்னசெய்வேன்! இதைக் கழற்ற முடியவில்லேயே? அதிக பாரமாகவு மிருக்கிறதே?

மாதகி :—சீக்கிரம் என் மாலேயை தந்துவிடுமே! ரொம்பவும் ரோஷமுள்ளவராக யிருக்கிறீரே?

கோவிலன் தரு.

கெவுன்ஜா திதி என்ற மெட்டு.

சட் நீ இதைத் சுழற்றிக் கொண்டு சண்டாளி
நில்லாதே போடி போடி
நீலிநாயே நீ கத்தாதேடி நிர்மூடி
நாடாதே குடிகேடி லவாடி
ஓடிப்போ ஓடிப் போடி

மாதகி தரு.

சேயிழை என் பொன் மாலேயைத் தானே
நீ யதைத் தாராவிடில் நான் விடேனே

கோவிலன்தரு.

நில்லடி நில்லடி நெருங்காதே போடி
நீ வந்தால் செல்குவேன் நிந்திப்பதேனே

கோ :—ஏ! பெண்பாவாய் அதிகமாக வார்த்தையாடாதே?

மாதகி :—துரையே! இப்படியும் வருத்தமுறச் செய்யலாகுமோ? என்னே அங்கீகரியும் இல்லேயாயின் என்னுடைய

தரு நோட்

பெண்ணே சேர்ங்-என்ற மெட்டு.

மாதகி மாலே தாரும் போரேன்
கோ மாதே நீயே கைக்கொள்

மாதகி மன்ன இது ஞாயமா
கோ மாதே இது ஞாயந்தான்
மாதகி வந்திடும் வந்திடும்
கோ வரமாட்டேன் வரமாட்டேன்
மாதகி மாலையாகிலும் தாருமே
கோ மாதே நீ கழற்றிக்கொள்
மாதகி மரி யாதையா
கோ சரிதான் போடி
மாதகி சஞ்சலந் தீரடா
கோ வஞ்சகி போடி போ
மாதகி கொஞ்சம் முத்தந் தாடா
கோ கோறிடாதே போடி
மாதகி மாரன் கணை சீறுதடா சேரவாடா
கோ நாரிஎனைக் கோறிடாதே நாயே போடி

மாதகி :—ரொம்பவும் கோபிக்கிறீரே? என் மாலையை கொடுத்து விடுமே?

கோ :—ஆஹா என்னசெய்வே னிதற்கு
மாதகி :—யோசியாதீர் சீக்கிரம் தாரும்?

கோவிலன் தரு.

தரு பத்தினி கர்னகையே என்ற மெட்டு.

கழற்ற முடிய வில்லை அடி
காதகி யிதென்ன தொல்லை

மாதகி தரு.

காரிழை என்மாலை நீருந்தாரா விட்டால்
வாரும் என் பின்னகவே

கோவிலன் தரு.

பின்னகவா வென்று அடி
என்னை அழைக்காதே இன்று

மாதகி தரு.

பொன்மாலை தந்திட்டால் என்னுடு செல்கிறேன்
என்ன சொல்கிறீர் இதற்கு

கோவிலன் தரு.

ஆனலிதைக் கழற்றிக்கொண்டு செல்நீ
அழையாதே நீ என்னைக் கண்டு

மாதகி தரு.

போனது போகட்டும் போஷிக்க வந்திடும்
பொறுக்க முடியாதினி

கோவிலன் தரு.

முடியாவிடி லெனக் கென்ன சீசீ
மூதேவி நீ செல்வாய் முன்னே

மாதகி தரு.

கொடுக்கும்படியான அடைக்காய் போட்டுகொண்டால்
மடந்தையான் சென்றிடுவேன்

கோவிலன் தரு.

அப்படி தாம்பூலம் இப்போதே தந்திட்டால்
சொற்படிபோல் செய்கிறேன்

கோ:—கொடுக்கும் படியான தாம்பூலத்தை நான்போட்டுக் கொண்டேனாயின், போய் விடுகிறாயா, ஆனால் சீக்கிரம் கொடு! மாலையைக் கேட்க மாட்டாயே!

மாதகி:—இல்லே கேட்கவே மாட்டேன்.

கோ:—ஆனாற் சரி! சீக்கிரம் கொடு.

மாதகி:—நல்லது! அப்படி எட்டவே இரும்! இதோ வருகிறேன் மாமா வெற்றிலேப் பாக்கில் மாத்திரையை சேர்த்துத் தாரும். கொடுத்து விடுகிறேன்! சும்மா இருந்தால் மசிய மாட்டார்.

(தாம்பூலம் கொடுக்க கோவிலன்
வாயில் போட்டுக் கொண்டு
மயங்குகிறான்.)

கோவிலன் தரு.

மஞ்சு நிகர் என்ற மெட்டு.

மாதகி உன் பாதமே கெதி
மங்கையே வாடி செங்கரந்தாடி
ஆதரிப்பாய் எனடி மோடி இடி
அருகே வாதயை புரிவாயிப்படி
மருவியாடிட தருணமீதடி மா

மாங்குயிலே மனமும்மாறுதே
மையல் மீறுதே கையுஞ் சோறுதே
பூங்கிளியுனைச் சேரக்கோறுதே
பொருந்திசேரடி சரசன் பாரடி
அரிவை காரடி விரகந் தீரடி மா

மாதகி :—இதென்ன மாமா! இப்படிவழிமறிக்கின்றுரே பாரும்?

கோவிலன் தரு.

சுந்தரமா யணேகுவாய் என்ற மெட்டு.

ஆசை நாயகியே என்னை ஆதரிப்பாய்
பாசமுள்ள மாங்குயிலே பரவசந்தீர் மயிலே
பாவையெனக்குப் புகழ் தருவாய் தருவாய் தருவாய் ஆ

மாதகி தரு.

நங்கை யென்னைக் கோறுவது-ஞாயமல்ல
மங்கையென்னைப்பலவாரேசி வம்பு தும்புமாகப்பேசி
அங்கெனை அழைப்பது நலமா நலமா நலமா நங்

கோவிலன் தரு.

அழைத்தே னுந்தனைக்கூட அங்கஜனுலே யாட
அறிந் திடுவாய் நீகாம ரதியே ரதியேரதியே

மாதகி தரு.

காமரதி நானே வேனே கருதுதல் ஞாயந்தானே
கையைப் பிடிக்காதே நீ அகல்வாய் அகல்வாய் அகல்வாய்

கோவிலன் தரு.

அன்னமே தூஷியாதே ஆசையைத் தீரிப்போதே
அன்புடன்இணைகுவாய் மயிலே மயிலே மயிலே அன்

மாதகி தரு.

மயில் குயில் நானு மல்ல மறுத்து இப்படி சொல்ல
மன்னர்க்கழ கல்ல நீ தொடாதே தொடாதே மயில்

கோ —அடிபிரியசகி! ஏன் எட்டவே நிற்கிருயே! ஏதோ என் சமீபம் வா!

மாதகி:—சமீபமா வருகிறது ஏன் அடே போ! பயித்தியக் காரா!

0-8.2.N.1914 N4

தரு.

காணவேணு என்றமெட்டு.

என்னுடன் கலவி செய்ய வாடி இனி
ஏடாகோடம் பேசாதடிக்கிரீடி இனி

மாதகி தரு.

இனி பன்னிப் பன்னிப் பேசிடாதே
பொன்மணியென்று தொடாதே
போடா மூழு மூடர் பன்

கோவிலன் தரு.

மூடனென்றாலும் சரியே கண்ணே ஒரு
முத்தமேனும் தாடி ரதிப் பெண்ணே

மாதகி தரு.

அடே ஈடில்லாவெறி நாயே சீ
நாடிடாதே படுதோஷி
நாயே நட நீயே

கோவிலன் தரு.

மோகனசிங்காரி எந்தன் ஆவியே அடி
மொழியிலே காரடி சஞ்சீவியே

மாதகி தரு.

நீயுந் தோகை என்னைக் கருதிடாதே
நீ கவலையாவாய்ப் பேதே
நில்லு தூரச் செல்லு

கோவிலன் தரு.

சொல்லவும் மனமும் வரவில்லையே என்னைக்
கொல்வாயாகில் தீர்ந்திடுவேன் தொல்லையே

மாதகி தரு.

அந்த கொல்லைக் காட்டு நரியைப்போல்
பல்லைக் காட்டாதே மென்மேலே
பாவி கொயவேன் ஆவி கொ

கோவிலன்:—காதலி உன்னிஷ்டப்படியேசெய்! நான்கொண்டிருக்கும்படியான ஆவலைத் தீர்த்து விட்டால்உனக்கு அநேக புண்ணிய முண்டு?

மாதகி :—புண்ணியமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் எனக்கு! இப்படி என்னை ரோதனம் செய்வதிற் பயனில்லை! அதிகமாகப் பேசவேண்டாம் போ போ!

கோவிலன் தரு.

தோ ஜோரு வாலா என்ற மெட்டு.

எப்படி போவேன் எப்படிபோவேன்
எப்படி போவேனடி உன்னை விட்டு
எப்படி போவேனடி தனியாக
எப்படி போவேனடி

மாதகி தரு.

இப்படி போயேன் அப்படி போயேன்
எப்படி யானாலும் போ எனக்கென்ன
எப்படி யானாலும் போ செட்டி யையா
எப்படி யானாலும் போ

கோவிலன் தரு.

மைப்படியாளே மாதகியே
மையலைத்தீரடி நான்கொண்ட
மையலைத்தீரடி என்னோடடி
மையலைத்தீரடி

மாதகி :—இது அப்போது இல்லையே!

கோ :—நான் என்ன குற்றம் செய்திருந்தாலும் அதைப் பொறுத்து, என்னைக் காக்கவேண்டியது உன்பாரம் இனிமீது என் உயிரை விட்டு விடுவேன் இது சத்தியம்?

மாதகி :—அடடா! இதென்ன பெரிய கஷ்டம் பாரும் மாமா! இதென்ன இப்படி தொந்திரவு செய்கிறாரே?

மாமா :—போனற் போகிறது பாவம், அப்போது தான் தெரியாமற்செய்து விட்டார் பாவம் அவர் இவ்வளவுதூரம் கேட்கும்போது என்னசெய்கிறது, ஒத்துக்கொள்? இனிமேல் அப்படி செய்ய மாட்டார் அதற்கு நான் ஜாமீன்.

மாதகி :—ஆனற் சரி! துரையே உமக்காக மாமா பரிந்து பேசுகிறார், அதுவுந்தவிர நீர் இனிமேல் அப்படி செய்யமாட்டீரே! ஏதோ கைப்போடும். (கைபோட) சத்தியம் செய்யும்

கோவிலன் :—சததியமாய் உன்னைக்கைவிடுவதில்லை இனி?

மாதகி :—சந்தோஷம் நாயகா? இனி எனது நாடு செல்லலாமா! மாமா வாரும்.

(செட்டிமார்கள் இக்கோலத்தைக் கண்டு தாசியையும், மாமனையும் அடித்து துரத்துகிறார்கள்.)

3-வது சீன் திருக்கடையூர்.

மாதகி :—துரையே இதுதான் திருக்கடையூர், அதோ தெரிகிறது பாரும், அமிர்த கண்டீஸ்வரருடைய ஆலயம்; இதோ பாரும், இந்த பலிபீடத்தின் முன்பாக நின்று, நாமிருவரும் பிரதிக்கினை செய்து கொள்வோம்.

கோ :—நல்லது காதலி !

மாதகி கவி.

உன்னைநான் பிரியமாட்டேன் வுத்தமனேஎன்றென்றைக்கும்
என்னையும் நீ அப்படியே இணைபிரியா திருப்பாய்

கோவிலன் கவி.

அன்னமே உன்னிஷ்டம்போல் அன்பனு னிருப்பேன்சத்யம்
சொர்னமே ஆணையிட்டேன் தோகையேவருவாய் கண்ணே

கோ :—காதலி சத்யமாக நானுமவ்வாறே தான் !

மாதகி :—சந்தோஷம் வாரும் நமது மாளிகைக்குச் செல்வோம் ?

4 வது சீன் மாதகி வீடு

(கோவிலன் மாதகி இருவரும் போகிறார்கள், உடைந்த நாற்காலிமீது கோவிலன் அமர்கிறான்.)

மாதகி :—என்ன செய்வது பிராண துரையே என் பிழைப்பு அப்படி யிருக்கிறது இனி தாங்கள் வந்தபின்பு எனக்கென்ன குறைவு ?

கோ :—காதலி இதென்ன சகலமும் பழமையாயிருக்கிறதே சே இது எனக்கு நன்றாக யில்லை !

மாதகி :—நாதா ! வேறொன்று என்னை பாதிக்கின்றது அதாவது இதர தாசிகள்போல விசேஷமான விலையுயர்ந்த அணியாடைகளும், எழெட்டுக்குள்ள, மாடிவீடில்லையே யென்று தான் யோசனை ; இது ! தவிர வேறொன்று மில்லை ?

கோ :—விசனப்படாதே ! ஈசன் அருள் புரிவார் !

கோ :—வாஸ்தவம் கண்மணி உனக்கென்ன வேண்டுமோ கேள்

மாதகி :—நல்லது துரையே ! ஆனால் நாமிருக்க

தரு.

ஸோஸிகரி என்ற மெட்டு.

மாதகி :— மாடி வீடு கட்டித் தாருமே
கோ :— ஓ ! ஓ ! அப்படியே
மாதகி :— ஜோடிகாசி சேலைகள் வேண்டும்
கோ :— ஆ ! ஆ ! நல்லதடி
மாதகி :— ஆடிடவே மஞ்சம் வேண்டுதே
கோ :— கண்ணே கண்ணே மெலிந்திடாதே
மாதகி :— ஆடைபல ரவிக்கை வேண்டுமே
கோ :— நல்லது நல்லது அப்படியே
மாதகி :— ஈடில்லாத நத்து மூக்குத்தியும்
இசைந்தகம்மலும்ரத்ன ஹாரம்பலவும்
கோ : இன்னுமென்ன வேண்டுமோகேளாய்
மாதகி :— இஷ்டமான ஜிமிக்கையும் . கிள்
ளட்டிகை தண்டை வேணுமே
கோ :— கட்டிக்கரும்பே கைகாப்புகொலுசும்
கடையம் வாங்கியும் தாரேன்
மாதகி :— காமி சாமி கனக சரடும் தாரும்
கோ :— காசிமாலையுந்தாரேன் கைவளையலுந்தாரேன்
காலுக்குதண்டை தாரேனகண்ணே சகலந்தாரேன்
மாதகி :— கண்ணாளா சந்தோஷ மாகினேன்
கோ :— கட்டியோர் முத்தம இஷ்டமாய் தந்திடுவாய் மா

கோ .—சந்தோஷம் நீ என் ஓர்வித வாட்டமாயிருக்கின்றனை உன
க்கு இன்னும் வேண்டியதென்ன கேள் ! தருகிறேன்.
மாதகி :—காதலா ! இன்னும் கேட்போமென்றால் கூசுகின்றது,
கோ !—கண்மணீ அப்படி கூச்சப்படாதே.

கோவிலன் தரு.

மான்கு தரியாம் என்ற மெட்டு.

என்னவேண்டுமோ என்னவேண்டுமோ
உன்னிஷ்டமுள்ளவற்றை இன்றேகேள் தருகிறேன் எ

மாதகி தரு.

ஈராயிரங் காணி தாராய் மனோஹரா

கோவிலன் தரு.

இன்னும்கேளடி கன்னியே உன்னிஷ்டம்போலே
பொன்மணிகளின்றே தாரேன் இன்

மாதகி தரு.

காலே கடை சிலவு கொள்ள கால்மரக்கால்பொன் வேணும்
ஓலயுச்சி சிலவுக்காக ஒருமரக்கால்பொன் வேணும்
மாலே சிலவுக்கு அரை மரக்கால்பொன்தான் வேணும்
பாலிகைக்கு பாக்கு கொள்ள பத்துலக்ஷம்பொன் வேணும்
சிலமாய் வெற்றிலே பாக்குக்கு செம்பொன்னுலக்ஷம் வேணும்
ஏலம்புகையிலேக்கு எட்டுலக்ஷம்பொன் வேணும்
பாலுடன் சுண்ணம்பிற்கு பதினுயிரம்பொன் வேணும்
படுக்கைக் காயிரம் பொன் வேணும்
பஞ்சணேக்காயிரம் பொன் வேணும்
பத்தாவே என்தாய்க்கு பொன் வேணும்
நித்திரைக் காயிரம் பொன் வேணும்

கோவிலன் தரு.

அத்தனேயும் சத்யமாக
பத்னிதாரேன் சித்தமகிழ்வாய் எ

மாதகி :—ஆனல் சந்தோஷம் ! ஆனல் சந்தோஷம் !

கோ :—அஞ்சுகமே ரஞ்சிதமே பஞ்சணேக்கு வஞ்சி வாராய் ஆ

மாதகி:—மெத்த சந்தோஷம். (கோவிலரும்,மாதகியும் அயர்ந்தபி பின்) வாரும் துரையே !

கோ :—அடே சேவகா ! இந்த லிகிதத்தை காவிரிப்பூம் பட்டணத் தில் இருக்கும் என்தந்தையாகிய மாச்சோட்டான் செட்டியா ரிடம் கொடுத்து விட்டுவா, தெரியவருமா என்னேப்பற்றியா தேனும் கேட்டார்களாகில் மிக்க கஷ்டத்துட னிருப்பதாய்த் தெரிவி ? போ !

மாதகி தரு.

மோகலாகிரி என்றமெட்டு.

மையலாகிரி ஐயோ மீறுதே
கையோகா உய்வாய் சாமி
பையல் மாரன் எய்யும் வாளி
பதைக்குதே யாது செய்வேன் மைய

கோவிலன் தரு.

உன்மனம்போல் தென்பாய் நாடுவேன்
அன்னமே தேனே . . . மானே
கன்னல் மாரனின் துன்பம் போக்குவேன்
கண்ணே பெண்ணே குண்ணி டாதே

மாதகி தரு.

பேரானந்தமாக பெண்டேனை நாடியே
நாராயணசாமி நற்பதம் பாடியே
சேரா யொரு முத்தம் தாராய் என் கிரீடியே
தேவி யாளை தாவி பூர்ந்திடு

கோவிலன் தரு.

வாராய் மைடியர்லேடி மஞ்சத்தில் விளையாடி
சீராய் நாமுமாடி சிறப்புடனே க்ரீடி
நாராயணசாமி நற்பதமும் பாடி
நாடி விளை யாடி ஓடி வர்

5-வது சீன் கன்னகி வீடு.

கர்னகி விழித்து நிலைக்கண்ணாடியை பார்க்கிறாள்.)

கன்னகி :—அடி சகி இப்படிவர் !

சகிவருகிறாள்.

ஆ ஹா! இதென்ன? ஆச்சரியமா யிருக்கின்றதே! இப்படி சமீபத்தில் வா !

க வி.

கழுத்தினில்தாலியேது கையில்கங்கணமேது
அழுத்தமாய்தரித்தயெனது ஆளனர்தானுமெங்கே.

த ரு.

ஜப்தகலந்தரு என்றமெட்டு.

என்னடி சகியா என் கழுத்தினிற் றாலி
யெனை யறியாமலே கட்டின தார்
கன்னியே கங்கணம் கையினி லிருக்குதே
காரணம் யா,தடி தெரியேனே. என்

பின்னமாமோ கற்பும் போமே
இன்றுளென் செய்வேன்
பன்னிடா விடிலாவி போகும் பார்
உன்னதமா யிருக்குதடி ஓஓ ஆச்சரியம்

இனி அன்னவரை இன்று ரென்று
நன் றுரைப் பாயே. என்

கர்னகி :—சகியா! இதன் விபரம் சீக்கிரம் சொல் இதை நினைக்க நினைக்க எனக்கே ஆச்சரியமா யிருக்கிறது.

சகி :—தேவி! மாச்சோட்டான் செட்டியார் குமாரராகிய கோவிலச செட்டியார் தங்களுக்கு ஐந்தாம் வயதில் கையில் மாங்கனி கொடுதது உம்மை மணம் புரிந்தார். அதே தினத்தில் சதுர்க்கச்சேரிககாக திருக்கடையூரிலிருந்து வந்த, மாதகி யென்னும் தாசி நடனம் புரிந்து உமது நாயகனை கைக்கொண்டு சென்றனளாம், இப்போது அவளிடமேதா னிருக்கின்றாராம்?

கர்னகி :—ஆஹா! அப்படியா, அடி சகி தாசியிடமா அகப்பட்டுக்கொண்டனர். நல்லது! அடி சகி! தாசிகளிட நடவடிக்கைகளை தெரிவிக்கின்றேன் கவனி?

தரு.

காணவேணுங் காண என்ற மெட்டு.

தாசிகளோ மெத்தவும் ஆபாசம் ஆ ஹா
சீ சீ அவர் கில்லை விசுவாசம் மிக்க
ஆசை காட்டி மோசம் செய்து
காசை பறிப் பாரே கண்ணைக்
காட்டி மையல் பூட்டி தாசி

தரு.

கையது வரண்டு போன பின்பு என்றுங்
கண்டவரை தேடிக்கொள்வார் முன்பு உடன்
சையோ கமே செய்திடுவார்
ஐயோ மிக்கப் பொய் காரிக
ளாச்சே நலம் பேச்சே
அப்பன் பிள்ளை போன் வருவானே அவர்க்கு
அடிக்கடி இடந்தருவார் தானே அந்த
துப் பிலலா மைப் படியாரை
எப்போதும் ஒப்பிடலாகா
தென்று சொல்வேன் நன்று அப்
பணமுள்ள வரையில் வைப்பார் ஸ்நேகம் என்றும்
பத்துக்குமே லெவர் வந்தாலும் போகம் செய்வார்
உணர் வில்லாத மனத்தி னோரை
கணமும் நினைக் கொணது
காவில் என்றும் பூவில் பண்
ணாராயண சாமி பதம் பாடி எந்த
ணயகரிருக்கு மூரைத் தேடிக் கொண்டு

பேரா னந்த மாகச் சென்று
தாராயிந்த விகிதத்தை
தானே என் செந்தேனே

கர்னகி :—அப்பேர்ப்பட்ட பாதகிகளாச்சே அந்தபேர் வழியிற் சேர்ந்த அந்த மாதகி யென்னும் தாசி என் நாயகனை எப்படி எப்படி ஆட்டி வைத்திருக்கின்றாளோ? யாதுந் தெரிகிலேனே?

ஆதலின் நீயே சென்று அவரைக்கண்டு நான் தரும் விகிதத்தை மாதகி யறியாமல் அவரிடம் கொடுத்து அழைத்துக் கொண்டு உடனே வா? தெரியவருமா, நீ சீக்கிரமாகச் சென்றுவா? போ? தாமதிக்காதே!

(சகி கடிதம் கொடுக்க கர்னகி வரைந்து தருகிறாள் சகி செல்கிறாள்.)

6-வது சீன் மாதகி வீடு.

சகி :—இதோ கோவிலச் செட்டியார் வீற்றிருக்கின்றார் இவரிடம் நம் தேவிகொடுத்த விகிதத்தை கொடுப்போம், வந்தனம் சுவாமி இந்த விகிதத்தை வாசித்து பாரும்?

கோ :—எதோ! நீயார்?

சகி :—வாசித்துப்பார்த்தால் தெரியவரும் (சகி விகிதம்தர கோவிலன் வாசிக்கிறான்.)

கோவிலன் விருத்தம்.

வந்தனம் பிராணநாதா மாலையிட்டு மூலைதேடி
எந்தனை வைத்துநீரும் ஏகினீர் வேசிவீடு
சுந்தரி நான்மாளப்போறேன் துணைவரவே விகிதங்கண்டு
வந்துமேபொன்னீர்தானும் வார்த்திட்டால்ஆவிபோமே.

தரு.

எபுடு கிருப கல்குனு என்ற மெட்டு.

கண்மணீ மாளப்போருயா கனியேஎனை விடுத்து கண்

பெண்ணே யுன் விகிதங்கண்டு
பேதைபோல் தயங்குறேனே
மண்ணிலுயிர் வைத்தினிவாழ்வேனோ யினிதானே கண்

ஐந்து வயதினிலே அறியாத நாளையிலே
அருங்கனி கையிற்தந்து அந்தநல் வேளையிலே
உந்தனை மணந்துஇங்கு உற்றேன்வேசியிடம்நான்
எந்தனுயிர்நிற்குமோ எப்படிநான் காணப்போறேன் கண்

மாதகி :—இதென்ன நம் காதலர் இவ்வாறு பிரலாபிக்கின்றுரே காரணம் யாதோ தெரிய வில்லை அருகிற் சென்று விசாரிப் போம்.

கோவிலன் தரு.

உன்னாலே என்சுகம் உத்தமிநான்கண்டேனடி
என்னாலே நீயுமே ஏதுசுகங் கண்டாயடி
பன்னிரண்டு வருஷமாய் பாவியு மறி யேனடி
கன்னகா உன்னைவிட்டு கணமுமிங் கிருக்கேனடி

கோ :—ஆஹா ! கண்மணி ? இப்போது எப்படிக் கிருக்கிருயோ, உனக்கு ஐந்து பிராய மிருக்கும்போது கையில் மாங்கனி கொடுத்து, மணம் புரிந்து அதுமுத லிதுவரையிலும் உன்னைக் கவனியாமலும் தொடாமலு மிருந்து விட்டேனே, சற்றேனும் உன்னை எண்ணுதிருந்து இந்த வேசியே கெதி யென்றிருக்கிறேனே, ஆ ! பிராணசகி

மாதகி :—காதலா ஏன் இவ்வாறிருக்கின்றீரே, என்ன காரணம் ஏன் பிரலாபிக்கின்றீர் சீக்கிரம் தெரிவியும்.

தரு.

போகலாம் வாரும் என்ற மெட்டு.

அழுவ தேனையா உம்மை யாரடித்தாரோ சொல்லுவீர் அ
விழுவதேன் புழுகுபோல் விபரம் யாதேகூறிடுவீர் அ
பாம்பு கடித்ததோ தேள் படுக்கென்று கொட்டிவிட்டதோ
தேம்பியே யழவேண்டாம் தேவி எனக்கு கூறிடுவீர் அ
நம்பியிருந்தேனே எனை நட்டாற்றில் விடாதீர் கோனே
கும்பியின்குடல் நோயோ உம்மை பிடித்துகொண்டதுபேயோ அ

மாதகி :—துரையே ஏன் விம்மி விம்மி வருந்துகின்றீரே சீக்கிரம் அடியாட்கு தெரிவியும் ?

கோவிலன் தரு.

தோகா தேனே என்ற மெட்டு.

என்னையுமடிப்பவர்கள் இவ்வுலகிலுண்டோ பெண்ணே. எ

அன்னமே கலங்கிடாதே துன்பமும் அணுகாது மாதே
சொன்னமே அடிஎன்கோதே என்றுக்கும் நீ அஞ்சிடாதே
குன்றிடாதே குன்றிடாதே கன்னியே மனதில்வேதே
தன்னுல்வாடுறே னிப்போதே மென்மேலும் வருத்திடாதே
கன்னியே விபரமாக பன்னிடுறேன் கேட்டிடுவாய் (எ)

கோவிலன் தரு.

ஆரும் அடிக்கவில்லை மாதகி அரவமும் கடிக்க வில்லை மாதகி
தேளுங் கொட்டவில்லை மாதகி தேவிகுலை நோயு மில்லை மாதகி
பேயும் பிடிக்கவில்லை மாதகி பெண்ணே தலைநோயில்லை மாதகி
ஐந்து பிராயத்திலே மாதகி அறியாத நாளையிலே மாதகி
மாலையிட்ட மங்கைக்கு மாதகி கால முடிந்ததாமடி மாதகி
ஓலையும் வந்ததடி மாதகி ஜாலம் செய்யாமலனுப்பு மாதகி
வாழ்வுக்குதவாவிட்டால்மாதகி சாவுக்கு உதவவேணும் மாதகி
முத்தான வாய்திறந்து மாதகி உத்தாரம் சொல்வாயடி மாதகி

மாதகி :—சரி ! சரி ! மாமா என்னயோசிக்கிறீர், பாத்தீரா ! அப்போதே நான் சொன்னேனே கேட்டீரா ! காதலா ! நீர் அவசியம் போகத்தான் வேண்டுமோ ! நான் சொல்வதைக்கேளீர் போலும் அவசியம் போகவேண்டுமோ !

கோ :—ஆமடி காதலி !

மாதகி :—நிருபத்தைக் கிழித்து சீ சீ சீ

மாதகி தரு.

கபாரதத்ஹூத் என்ற மெட்டு.

போடா போடா போ போதும் போதும் வுந்த நேசம்

மூடா அடே தடியா மூதேவி சீ சீ போ போ

ஏடா கோடம் பேசாதே எட்டியடிப்பேன் சீ சீ போ போ

கோ :—கண்ணே என்ன செய்தாலும் செய் அனுப்பினாற்போதும்

மாதகி :—அடே கோவிலா உன்னைத் தெரியுமே செட்டிபுத்தியை காண்பித்து விட்டனே சீ ! தூ ! போ ! என் முன் நில்லாதே ஒழிந்துபோடா செட்டி... ! அடே ! அவள்

மாதகி தரு.

செந்தின்மா நகர் என்ற மெட்டு.

என்னிலும் அழகோ கர்னகி மாதவள்
என்னடா பதில்பன்னடா எந்தன் முன்னடா அடே
பன்னிரண்டாண்டாக உன்னை நம்பினேனே
பாதகா சீசீ காதகா
வேசியா னுனக்குப் பாசமாயிருக்க
வேண்டாமல் போறாய் தீண்டாமல் மனந் தூண்டாமல் இங்கு
தாசிநானிருக்க நேசிவேறுவாளோ
சாற்றடா பதம் போற்றடா எ
ஆரைச் சதமென்பேன் ஆருக்குப் போரேனென்
றறிவித்தீர் நன்கு தெரிவித்தீர் புலன் குறிப்பித்தீர் குரு
நாராயணசாமி பாராயணம்பாடி
நாடுவாய் எனை நாடுவாய் எ

கோ:—இதென்ன கண்மணி இப்படி வருத்தப்படுகிறாயே நான் ஓடோடியும் சென்று அவளுக்கு செய்யவேண்டிய கடனை முடித்து வந்துவிடுகிறேனென்று தெரிவிக்கிறேனே அங்கேயே யிருந்துவிடுவேனோ! கண்ணே தயைசெய்து அனுப்பு.

மாதகி:—நாயகா என்னைப்பிரிந்திருக்க மனமும் வந்ததல்லவா துரையே எப்படி துணிந்தீரோ இப்படி செய்வீரென்றுமுன்னமே நான் அறிந்திருப்பேனாயின் இவ்வளவு ஆவல் வையேனே என் ஆசைதுரையே பிராணகாதலா நீ போகாதே இன்னம் உனக்கு தமாஷான சுகங்கொடுக்கிறேன் நானென்ன உன் மனப்படியில்லையா உனக்கேனிந்தமதி ஆசை துரையே

கோவிலன் தரு.

மஞ்சுளிகர் என்ற மெட்டு.

(பின் முடுகு.)

கண்ணே நானு முன்னைப் பிரிந்திடேன்
கலங்கிடாதே மெலிந்திடாதே
கொண்டவளேயான் பார்த்தோடிவாரேன்

மாதகி தரு.

அடேகோவிலாயானும் தீவினைப்பட
வேவிடுக்காதே பூவிலேயினி
வெறுத்தாயானா லாவிவிடுப்பேன்
வேண்டினேன்சாமி ஆண்டருள் காமி
பிறகு பார்த்துக் கொ[illegible]ள்ளலாம் வாயேன்

கோவிலன் தரு.

பிரிய மாமணி தருகுவாய் விடை
உரிய காரியம் புரிந்தோடிவாரேன்
உத்தமியே சித்தங்கலங்காதே
ஒருநொடிதன்னில் வருவேனே முன்னில்
சற்றே தயைவைத் தனுப்படி கோதே பி

மாதகி தரு.

சரசசல்லாபம் புரிந்துவிட்டுமே
பிறகு செல்லுவாய் துரையே நீ யினி
பித்தமதி கரிக்கச் செய்யாதே
பேதையை நீயே காதலிப் பாயே
செத்தா லென்ன ஒழிந்தது சனியே சா

கோவிலன் தரு.

செய்ய வேண்டிய காரியங்களை
செய்தோடி வாரேன் நீ விடைகொடு
சேய நாராயணசாமி தன்
சேவடி போற்றி தாவியே வாரேன்
நீ எனக்கு விடையதுகொடடி செ

மாதகி :—துரையே காதல் தந்த மாதகி யுன்னருகிருக்க ஆசை தாராததோஷி எப்படிபோனாலும் போகட்டும் வாரும்இப்படி.

கோ :—கண்ணே நீ இதுசமயம் அப்படிசொல்லாதே என்னைப் போன்ற வர்த்தகர்கள் யாவரும் மதிக்க மாட்டார்கள் நான் கட்டின தாலியை கைமேலே வாங்கிக்கொண்டு வைகையில் ஸ்நானஞ்செய்து ஓடோடியும் வந்துவிடுகிறேன் எதோ விடைகொடடி காதலி.

மாதகி :—ஆஹா ! நாம் எவ்வளவு சொல்ல்யும் கேளேனென்று யல்ல, சீ ! சீ!! உலகினி விட் ... ட்ட,

தரு.

தக்க பாராங்கல்லே என்ற மெட்டு.

புருஷரை நம்பலாகாது மந்த
புத்தியும்விட்டு போகாது உன்
பருப்பென்னிடம் வேகாது அடே
பாதகா செய்யாதே தீது
எப்போதும் பிரியேனென்று நீயும்
எனக்குரைத் தாயடா அன்று ஆஹா
இப்போது கைவிட்டால் நன்று ஆஹா
இக்ஷணம் செல்லுவாய் கொன்று
நாராயணசாமி பாட்டு பாடி
நவிலுறேன் நீ அதை கேட்டு இங்கு
தாராளமாய் வீணமீட்டு அவர்
தாளடி தினமும் பாராட்டு

மாதகி :—ஆடவரை நம்பக்கூடா தென்று சொல்லும் மூதுரை யாகப்பட்டது உன்னால் உண்மையாகினது துரையே வா! என்னுடன் கொஞ்சம் போதிருந்தாவது போயேன்.

கோ :—அடிகாதலி இப்பேர்பட்ட நிலமையில் என்னே அழைக்க லாகுமா இது சமயம் வேண்டாம் பிறகாகட்டும்.

மாதகி :—அப்படியா! எப்படியும் போகவேண்டியது தானே சரி! நீ, இத்தனே வருடமாயிருந்து போகப்போகிராயே அதற்காக நான் பார்த்திருக்க உன்னேப்போல் ஒரு பொற் பதுமை தந்து விட்டுபோ.

கோ :—ஆ! என்ன செய்வேன் இதற்கு! இப்போது திடீரென்று பொற்பதுமை எப்படி ஏற்படும்! என்னசெய்வேன் ஆ! காதலி.

தரு பாராயோ என்ற மெட்டு.

பற்றுதபத்தினியே பழுதுபடா ரத்தினமே
பொற்கொடி என்னேப்போல் பொற்பதுமைவேண்டுமடி
மர்மமதுவையாதடி கற்பரசியமைப்பாயடி
உர்பவிக்கச்செய்வாயடி உத்தமி உ உ உ

(பது... ...ற்பத்தி.)

கோ :—கண்மணி ! மாதகி இதோபார் என்போன்ற பதுமை ! இனியேனும் விடை கொடேன்.

மாதகி :—அப்படியா தொட்டுப் பார்த்து பேஷ் ! பேஷ் ! அச்சா சே ! சே ! இது கச்சா ! இதென்னதுரையேபேசவில்லையே !

கோ :—என்னடி ! பதுமை எங்காகினும் பேசுமா ?

மாதகி :—அப்பப்பா ! பேசதான் வேண்டும். பேசாவிட்டால் எப்படி ! உம்மைப் போலவே பேசவேண்டும் உம்மைப் போலவே, கொஞ்சி ,சிரித்து, முத்தங்கொடுக்க வேணும் உம்மைப் போலவே என்னுடன் கூடயிருந்து, நான் என்னென்ன சொல்லுகிறேனோ அதேபடி தான் செய்யவேண்டும், அப்படி யிருக்கும்படி சொல்லி விட்டு நீர்போம்

கோ :—இதற்கென்ன செய்வேன் ! கன்னகா ! வரவேண்டுமென்று நினைத்தும், பயனில்லாமலிருக்கிறதே எப்படி வருவேன்.

தரு பாராயோ என்ற மெட்டு.

மாசிலாத இப்பதுமை மாதுடன் கொஞ்சிக்குலாவி
பேசவும் செய்வாயடி பெண்மணியே பத்தினியே
கண்மணியே பத்தினியே விண்மணியே பத்தினியே
பொன்மணியே பத்தினியே பொற்கொடி பொ பொ

(பதுமை பேசல்.)

பதுமை தரு ஹாரியாலா என்ற மெட்டு.

துரிதமாகநீயும் அனுப்புவாயே
அரிவையேநீஅனுப்பாவிட்டால் அடித்திடுவேனே
என் அண்ணன் வந்திடுமளவும் இங்கிருப்பேனே துரி
இவரை இங்குவைத்திடாதே இப்போதே யனுப்பு
அவரைப்போல அனேகதொழிலை அரிவைசெய்வேனே துரி

பதுமை :—அடி மாதகி இவரைப்போகச்சொல் நான் உன்னிஷ்டப்படியே யிருக்கிறேன்.

மாதகி :—காதலா-உம்மை பிரிய மனமில்லையே என்ன செய்வேன்.

(பதுமை அடித்தல்.)

ஐயையோ ! அப்பப்பா ! மாமா ! இதென்ன இந்தப்பதுமை இப்படி அடிக்கிறதே ! என்னசெய்வேன் காதலா நீர் போய் வாரும், என்னை அடிக்கா[illegible]ருக்கும்படி இதற்குச் சொல்லு[illegible]

கோ :—பதுமையே! இப்போது அடிக்காதே என்னை போகும் படி விடை கொடுத்துவிட்டாள்.

பதுமை :—நல்லது, ஹே! மாதகி அனுப்பிவிடு! இவர்போலவே யிருக்கிறேன்.

மாதகி :—துரையே? நீரோ, ஒரே பிடிவாதமாய்ப் போவேனென்கிறதாகத் தெரிவிக்கின்றீரே, நல்லது நான் ஒன்று தெரிவிக்கிறேன் அதுயாதெனில் நீர் இம்மாதிரியாய் குடுகுடுவென்று அங்குபோய் இப்படி ஒருகால் அப்படி ஒருகால வைத்து அப்படியே பார்த்துவிட்டு, அங்கனே நின்று எல்லா காரியங்களும் செய்துவிட்டு உடனே வந்து விடவேண்டும் தெரியுமா போம் ஜாக்கிரதை.

(போகிறான் பதுமை விழுகிறது.)

மாதகி :—இதென்ன மாமா! விழுந்து விட்டதே என்ன செய்வேனிதற்கு.

மாமா :—வருத்தப்படாதே! நீ பாம்பு கடித்து குத்துயிராய்க் கிடப்பதாக ஒருலிகிதம் எழுதிக்கொண்டுபோய் தருகிறேன் நீ இப்படியே யிரு.

மாதகி :—நல்லது மாமா!

(மாமா போகிறார்.)

7-வது சின் சாலைவழி

மாமா :—ஐயா செட்டியாரே இந்த சீட்டைப்பாரும் கருப்பும், தடவியிருக்கிறது.

கோ :—என்ன விசேஷம் இதென்ன மாமா! யாரை! பாம்பு கடித்தது! மாதகியையா? ஐயையோ என்னசெய்வேன்.

மாமா :—உன் ஆசைக்காதலியாகிய மாதகியைத் தான்.

கோ :—ஆ! கண்மணி!

தரு ப்யாரே மோஹனா என்ற மெட்டு.

மானே மாதகி பாம்பினால் மாண்டு போனாயோ மாதகி
ஆனேன் தனியாயிப்படி அனாதியானயா மாதகி

சாரைசர்பம்போலே கூடியே சரசமாயிருந்தோமே மாதகி
ஆருமேதிக்கில்லாமல் எமன்பால் அன்னமேசேர்ந்தாயோ மாதகி
கன்னகையாளங்கும் நீ யிங்கும் காதலிமாண்டீரோ மாதகி
என்னநான்செய்வேனடி திக்கின்றி யிங்குவருந்துரேனே மாதகி

---

8 வது சீன் மாதகி வீடு

கோ :—இதென்ன ஆச்சரியம் மாதகி குத்துக்கல்போல உயிருட னிருக்கின்றாளே, சரி வந்தது வந்தோம் அருகிற் சென்று விசாரித்து போய் விடுவோம் என்னடி மாதகி? நீ மடிந்து விட்டதாக லிகிதம் வந்ததே, என்னடி இது.

மாதகி :—அது வரைக்கும் போதும் உம் உறவு, உன்னை நம்பி யிருந்ததற்கு நான் சாகத்தான்வேண்டும்.

கோ :—வருந்தாதே கண்மணி! நான்போகவா! சீக்கிரமாகவே வந்து விடுகிறேன் எதோ விடை கொடு!

மாதகி :—விடையா கொடுக்கிறது நல்லது! நீ பதுமைகொடுத்தா யே இதோபார்! பார்த்தாயா! எப்படிக்கிருக்கிறது! இப்ப டியும் நீ செய்யலாமா! அடே மோசக்காரா! அனைதைப்பெ ண்சுலபமாய்க் கிடைத்தா ளென்றல்லவா! இப்படி வஞ்சகம் செய்தாய் அடே என்னை ஏமாற்றலாகுமா நீ!

கோ :—என் ஆசைக்காதலி நான் உன் விஷயத்தில் என்மனமறிய நான் செல்ல விடை கொடடி? காதலி

மாதகி :—அப்படியா! நல்லது போனது போகட்டும் நீ சென்று வர குறைந்தது இரண்டு மூன்று நாட் செல்லுமல்லவா! ஆம்! அதற்காக நான் ஒன்று கோறியிருக்கிறேன்.

கோ :—அதாவது என்ன!

தரு-போதும் போதும் என்ற மெட்டு.

மாதகி ஞாபகம் என்றுமிருக்க நான் கேட்பதைத் தருகிறீரா
கோ பூபனுன் சத்தியமாய்தாரேன் பூவையேகேள்கிட்டவாருய்
மாதகி பொன்முடி கடுக்கன் தாரும்
கோ அன்னமே பெற்றுக்கொள்ளடி

மாதகி மன்னவுன் அணிகள்வேண்டும்
கோ என்சகியே தந்தேனடி
மாதகி உன்சட்டை நிஜாரும் தேவை
கோ மின்னொளி யாடைகளிந்தா
மாதகி மூன்தாரும் பெல்ட்டும் மோதிரம்
கோ சொன்னமே தடைசொல்லேனே
மாதகி தென்பாய்த்தா சீலைகைகுட்டை
கோ குன்றுமல் வாங்கக்கொள்ளடி
மாதகி பின்னலண்ணு கயிறுவேண்டும்
கோ நன்றுட னீந்தே னனடி
மாதகி கைநகம் கால்நகம் தாரும்
கோ சின்னப்பெண்ணே வாங்கிக்கொள்ளு
மாதகி சென்னி மயிர் மீசையுந்தா
கோ கன்னியே கத்தரித்துக் கொள்வாய்
மாதகி தன்யாதா அழகும் பல்லூத்தை
கோ இன்றிதனே எவ்வாறீவேன்
மாதகி அன்பா யிக்கத்தியாற் கொள்வேன்
கோ உன்னிஷ்டப் படியே செய்வாய்
மாதகி அலராதே கூடியாதே
கோ ஐயையோ நோகுமே
மாதகி ஆ ஹா! பேஷ் பேஷ் நனறுயிருக்கிறதே
கோ ஓ! ஹோ! உன்மனம் திருப்தியாயிற்று.

மாதகி:—திருப்திதான் ஆனல் ஓர்குறைவு என்மனதிலிருக்கிறது

கோ:—அதென்ன குறை வெளிப்படையாய்த் தெரிவியேன்.

மாதகி:—கண்ணாளா வேறொன்றுமில்லை எனக்கு பத்துலக்ஷம் பொன்வேண்டும் அதை நீர் சேகரித்த பிறகுதான் அன்னம் உண்ணவேண்டும்.

கோ:—அப்படியே உன்னிஷ்டம் போலவே சேகரித்து, பிறகு அன்னம் உண்பேன் இனியாவது நான் செல்ல விடைதருவையா?

மாதகி.—உமது மனப்படியே செல்லும்.

9-வது சீன் கர்ணகி வீடு

கோ :—இவ்வளவு தானே தாசிகள் சுகம், பேஷ்! இப்பொழுது தான் உள்ளங்கை நெல்லிக்கனிபோல், விளங்கியது, ஆஹா! நாம் எவ்வளவு பொன் தந்தோம்? ஆஹா! ஒன்று! இரண்டா! பனிரெண்டு கப்பல் பொன்னல்லவா! அவ்வளவு பொன்கொடுத்தும் என்ன பயன். விழலுக்கிறைத்த நீர் போலாயினவே! ஆம் அவ்வளவு பொன்னும் நம்வீட்டிலிருக்குமாயின் எவ்வளவோ, வியாபாரம் செய்யலாமே? ஆஹா! அதனை விடுத்து இந்தப்பாதகியாகிய தாசிவலையிற் சிக்கி, ஐயோ பாவம், 5-வயதுள்ள பால்மாறாத பெண்மணியை மணம்புரிந்து நம்பினவளை நட்டாற்றில் கைவிட்டது போல் தனியே விடுத்து பலபேர் நகைக்க நம்போன்ற செட்டிமார்களெல்லாம் பகைக்க உடலெடுத்தோமே? சே! என்ன கண்டோம். ஒன்றுமில்லை! நாமிருக்கும் வரையில் சுகித்தது தான் லாபம்? என்னசெய்வது! தயங்குவதில் பயனே இல்லை ஆஹா, நம்மாது என்னகெதியா யிருக்கின்றுளோ! சென்று பார்ப்போம்.

10-வது சீன் கர்ணகி வீடு.

கோ :—நமக்கு மாதகி எண்ணெய்யிட்டு, ஆற்றில் ஸ்நானஞ் செய்வித்தனள்; அது உபாயம் நாம் திடீரென்று தவறி ஆற்றில் விழுந்து விட்டோம் நாம் பத்தினி கன்னகையை நினைக்க அவளருளால் உயிருடனிங்கடைந்தேன். இங்கு இருக்கும் மனிதர்கட்கு நம் அடையாளமுந் தெரியவில்லை. இனி நமது கன்னகி எப்படி யிருக்கிறுளோ, என்ன கெதியாகினளோ தெரியவில்லை! உட்சென்று பார்ப்போம்.

கன்னகி :—சகி, அதோ என் நாயகர் வருகின்றார் நீ செல், நான் அழைக்கும்போது வா?

சேடி :—நல்லது தேவி?

கன்னகை தரு.

பக்ஷமிருக்க என்ற வர்னமெட்டு.

வந்தனம் செய்தேன் எந்தன் பிராணநாதா இந்த
எளியாளைக்காரும் மலர்ப்பாதா

[stamp]

கந்தாவினோதா கழலடிதாதா
சுந்தரிவினையைத்தீர்த்த பிரக்யாதா இனி
எந்தனைக்காரும் மலர்ப்பாதா வந்த
அறியாதவயதினில் இனிநீரே என்னை
சிறுமைபட்டிடவும் விட்டீரே
முறிபோலநீரே முன்பாய்வந்தீரே
தெரிவையையினி யேனுங்கொள்வீரே மன்ன
சிரம்பணிந்தே னருள் வீரே வந்த

கோ :—மங்கள முண்டாகுக. இவள் தான் நம்மாதோ யாதுந் தோன்றவில்லையே.

கன்னகி :—அடியாள் தங்களுடைய மாது தான் சந்தேக முறுதீர் பிராணபதி, நாணமுறுதீர், தங்களை இவ்விதகோலமாக்கின வரை தெரிவிக்கில் இப்போதே ஹதாஹதப் படுத்தி விடு கின்றேன்.

கோ :—கண்மணி, கோபியாதே இப்படி செய்தவர் யாருமில்லை அதைப்பற்றி கவலைப்படாதே ?

கன்னகி :—அப்படியா அதைப்பற்றி கேட்டதற்கு என்னை மன் னிக்க வேண்டும். துரையே தாங்களோ் அதிக களைப்புடன் வந்தீர்கள் வாரும் அமுது கொள்ள ?

கோ :—நல்லது கண்மணி !

கோவிலன் கர்னகி முதற்பாகம் முற்றிற்று.

ச ம் பூ ர ண ம்.